நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்

முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.

நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)

C.R.M.P.No. 300/2026

-

சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண். 48/2026

பிரிவு 303(2) BNS

உத்தரவு நாள்: 06.03.2026

CNR No. TNTS09-000650-2026

மாரி,

த/பெ. மாரியப்பன் (எ) மாரிமுத்து

..... மனுதாரர்/ எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் நகர காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர்/வாதி

மனுநாள்: 03.03.2026, மனு 480 BNSS.

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், சங்கரன்கோவில் நகர காவல் நிலைய குற்ற எண்.48/2026, பிரிவு 303(2) BNS –ன் வழக்கில் மனுதாரரை பிணையில் விடுவிக்க வேண்டி சமூக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டு கடந்த 03.02.2026 அன்று மனுதாரரை பிணையில் விடுவிக்க இரு நபர்கள் ரூ.10,000/– மதிப்பிற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தர வேண்டி சமூகம் மன்றத்தில் உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரருக்கு பிணைப்பத்திரம் கொடுக்க யாரும் இல்லாததால் 26.01.2026 முதல் தற்போது வரை சங்கரன்கோவில் கிளைச் சிறையில் விசாரணைக் கைதியாக உள்ளார் என்றும், சமூகம் நீதிமன்றம் மனுதாரருக்கு வழங்கிய பிணை மனுவின் உத்தரவில் கூறப்பட்டுள்ள நிபந்தனையான இரு பிணையதாரர் வழங்க வேண்டும் என்பதை மாறுதல் செய்து மேற்படி மனுதாரரை சொந்த பிணையில் விடுவிக்க வேண்டி உத்தரவு பிறப்பிக்குமாறும், எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு/எதிர்மனுதாரர் தரப்பில், இந்த வழக்கில் சங்கரன்கோவில் நகர காவல் நிலைய குற்ற எண்.48/2026, பிரிவு 303(2) BNS –ன் வழக்கின் எதிரிக்கு ஜாமீன் வழங்க ஜாமீன்தாரர்கள் யாரும் முன்வராதபோது எதிரி பிணையில் சென்றால் எதிரி தலைமறைவாக அதிக வாய்ப்புள்ளதாலும், எதிரியை வழக்கின் விசாரணைக்கு ஆஜர் செய்வது சிரமமாகக்கூடும் என்பதாலும், மேலும், எதிரி பிணையில் சென்றால் இதுபோன்ற திருட்டுக் குற்றச் செயலில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியை சொந்த ஜாமீனில் விடுவிக்க கடுமையான ஆட்சேபனை செய்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர்/எதிரி 26.01.2026-ம் தேதி கைது செய்யப்பட்டு, 26.01.2026-ம் தேதி சமூக நீதிமன்றத்தால் நீதிமன்ற காவல் அடைப்பிற்கு உத்தரவிடப்பட்டு, 26.01.2026 முதல் 03.02.2026 வரை மொத்தம் 9 நாட்கள் நீதிமன்ற காவலில் மனுதாரர்/எதிரி இருந்தார் என்பதையும், அதன்பேரில் BNSS பிரிவு 480-ன் கீழ் மனுதாரர்/எதிரி 03.02.2026 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பதையும், மேற்படி பிணை மனுவான Cr.M.P.No.157/2026-ல் பிறப்பிக்கப்பட்ட 03.02.2026 தேதியிட்ட உத்தரவில் "மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/—த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும்." என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டிருந்தது என்பதையும், அந்த நிபந்தனையை மேற்கூறியவாறு சொந்தப்பிணையில் விடுவிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. மனுதாரர் தரப்பு எடுத்துரைப்பைக் கருத்தில் கொண்டும், குற்றத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டும், "மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/—த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும்." என்ற நிபந்தனையை "மனுதாரர் / எதிரி தானும், தனி ஒரு நபரும் ரூ.10,000/—த்திற்கு பிணையப் பத்திரம் இயற்றித் தரவேண்டும்." என்று மாற்றியமைத்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.06 16:39:08 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்